DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 57 /2024 |
| Deposition of witness | : | P W-7 |
| Name | : | பிரபா |
| Father's /Husband Name | : | ரங்கசாமி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 43 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21st day August, 2025.
Both accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.02.2020-ம் தேதி மாலை 04.50 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது 40 வயது மதிக்கத்தக்க குருமூர்த்தி என்பவரை அவரது நண்பர் செந்தில் என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்த போது அன்றைய தினம் மதியம் 03.00 மணியளவில் நன்னிலம் அரசு மருத்துவமனையில் எழுதப்பட்ட விபத்து பதிவேட்டில் உள்ள அதே வழக்கு வரலாற்றை கூறினார். அவரை பரிசோதித்த போது விபத்து பதிவேட்டில் இருந்த அதே காயங்கள் காணப்பட்டன. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறுவது போல் தாக்கப்பட்டிருந்தால் அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் அதே நாள் அதே மணிக்கு 50 வயது மதிக்கத்தக்க செந்தில்குமார் என்பவரை அவரது நண்பர் செந்தில் என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்த போது அன்றைய தினம் மதியம் 03.00 மணியளவில் நன்னிலம் அரசு மருத்துவமனையில் எழுதப்பட்ட விபத்து பதிவேட்டில் உள்ள அதே வழக்கு வரலாற்றை கூறினார். அவரை பரிசோதித்த போது விபத்து பதிவேட்டில் இருந்த அதே காயங்கள் காணப்பட்டன. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து

மேல்சிகிச்சைக்காக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறுவது போல் தாக்கப்பட்டிருந்தால் அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஒரு நபர் தடுக்கி கீழே விழுந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதென்றால் சரிதான்.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 14:18:05 +0530